DINAMALAR 23.05.2023

# வளர்ச்சியில் பல்லுயிர் பாதுகாப்பின் பங்கு

## ஐ.எப்.ஜி.டி.பி., இயக்குனர் தகவல்

**கோவை, மே 23–**

''வளர்ச்சியை மேம்படுத்துவதில் பல்லுயிர் பாதுகாப்பு முக்கிய பங்கு வகிக்கிறது,'' என, ஐ.எப்.ஜி.டி.பி., இயக்குனர் குஞ்சு கண்ணன் பேசினார்.

கோவையில் உள்ள வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில்(ஐ.எப்.ஜி.டி.பி.,) செயல்பட்டு வரும், சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையத்தில் உயிரியல் பன்முகத்தன்மைக்கான சர்வதேச தினம், நேற்று கொண்டாடப்பட்டது.

பல்லுயிர் பெருக்கத்தின் முக்கியத்துவம் மற்றும் நிலையான வளர்ச்சி மற்றும் மனித நல்வாழ்வில் அதன் பங்கு குறித்து, மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே, இந்நிகழ்வின் முக்கிய நோக்கமாகும்.

ஐ.எப்.ஜி.டி.பி., இயக்குனர் குஞ்சுகண்ணன் பேசுகையில், ''பல்லுயிர் பாதுகாப்பு என்பது நமது ஆரோக்கியம், செல்வம், உணவு, எரிபொருள் மற்றும் பிற தொடர்புடைய வாழ்வாதார சேவைகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது.

வளர்ச்சியின் பல துறைகளை மேம்படுத்துவதில், பல்லுயிர் பாதுகாப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. நிலையான வளர்ச்சி இலக்குகள், பல்லுயிர் பாதுகாப்பின் நிலைத்தன்மையை அடைவதற்கான, நெம்புகோல்களில் ஒன்றாக அடையாளப்படுத்துகின்றன,'' என்றார்.

முன்னதாக, அவர் மாணவர்களுக்கான விழிப்புணர்வு சுவரொட்டியை வெளியிட்டார். முதுநிலை முதன்மை விஞ்ஞானி கண்ணன் வாரியர், திருநெல்வேலி தமிழக மாசுக்கட்டுப்பாட்டு வாரிய உதவி இயக்குநர் ஜெய்சேகர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில், பல்வேறு வகை மரக்கன்றுகள் நடப்பட்டன. ஐ.எப்.ஜி.டி.பி., ஊழியர்களுக்காக நடந்த வினாடி – வினா போட்டியில், வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும், பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.